**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 141/2023 தேதி- 13.03.2026
(PW.1) – வில்வின் பாபு

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1. என் அப்பாவின் பெயர் தங்கப்பன் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் உடன்பிறந்த சகோதரர்கள் எத்தனை பேர் என்றால் என்னுடைய தாய் மற்றும் என்னுடன் பிறந்த ஐந்து சகோதரர்கள் ஆவார்கள், அதில் ஒருவர் இறந்துவிட்டார். இவ்வழக்கில் என்னையும், என் அம்மாவையும் தவிர மற்ற சகோதரர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து புல எண்.80/14 மிடாலம் B கிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான்.

2. தற்போது அது உட்பிரிவு செய்யப்பட்டு புல எண்.80/14A2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புல எண். 80/14A2 பட்டிகை சொத்துடன் உள்ள மற்ற சொத்துக்களுக்கான பட்டா என்றால் சரிதான், அந்த **பட்டாவின் இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.2** ஆகும். புல எண்.80/14A2 ல் என் அப்பாவிற்கு மேலும் சில சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா மேற்சொன்ன புல எண்ணில் 2.750 செண்ட் நிலத்தை புதிய புல எண்.80/14 ல் ஆவண எண்.934/1983 ல் லாசர் என்பவருக்கு கருங்கல் சார் பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக ரூ.2,200/-க்கு விலைக்கு கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

3. ஆவண எண்.935/1989 உள்ள ஆவணத்தின் படி கருங்கல் சார் பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக பிரதிவாதிக்கு ரூ.4850/-க்கு சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. இதே சர்வே எண்ணில் உள்ள என் தந்தைக்கு உரிமைப்பட்ட சொத்துக்களை என் தந்தை இறந்த பிறகு என் தாயார் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் இரண்டு சகோதரர்களுக்கு மட்டுமே எழுதிக் கொடுத்தார். எந்த வருடம் எழுதிக் கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1980/2010 ஆவணத்தின் படி என்னுடைய சகோதரான ஆல்வின் என்பவருக்கு என் தாயார் என் தந்தை இறந்த பிறகு மேற்சொன்ன சர்வே எண்ணில்

4 சென்ட் சொத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் எழுதிக் கொடுத்திருக்கலாம். வழக்கு பட்டிகை சொத்து மற்றும் மேற்சொன்ன சர்வே எண்ணில் உள்ள மற்ற சொத்துக்களுக்கும் வில்லங்கம் பார்த்தேனா என்றால் 2023 ல் சுமார் 5 ஆண்டுக்களுக்கான வில்லங்கத்தை பார்த்தேன்.

4. 1989 யிலிருந்து வழக்கு பட்டிகை சொத்திற்கு வில்லங்கத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஆவண எண்.2789/2011 ல் செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் என் சகோதரான ஸ்டால்வின் என்பவருக்கு 4 சென்ட் சொத்தை என் தாயார் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். ஆவணங்களை எழுதிக் கொடுக்கும் சமயத்தில் என்னுடைய தாயார் வில்லங்கத்தை பார்த்து தான் எழுதிக் கொடுத்தாரா என்றால் பார்க்கவில்லை. நானும், மற்ற சகோதரர்களும் சேர்ந்து ஸ்டால்வின் என்பவருக்கு ஒரு சீர்திருத்த பத்திரத்தின் எண்.2236/2012 ன் வில்லங்கத்தை சரிபார்த்து தான் ஏற்படுத்தினோம் என்றால் இல்லை.

5. மேற்சொன்ன சீர்திருத்த பத்திரம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் அடமானம் வைக்க ஏற்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு மேற்சொன்ன சர்வே எண் சொத்திற்கு ஆவண எண்.567/2015 ன் படி லோன் எடுத்தார் என்றால் சரிதான். லோன் எடுக்கும் போது வில்லங்கத்தை சரிபார்த்தாரா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. 2021 ல் என் தாயார் என் சகோதரர் லெனின் என்பவருக்கு ஆவண எண்.2468/2021 ன் படி மேற்சொன்ன சர்வே எண்ணில் 5 சென்ட் சொத்தை எழுதிக் கொடுத்தாரா என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தை ஏற்படுத்தும் போது வில்லங்கத்தை சரிபார்த்து தான் எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை.

6. தங்கையன் என்பவருடைய தாத்தா என்றால் சரிதான். என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு பட்டிகை சொத்து தங்கைய்யனுக்கு உரிமைப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க விலை ஆவணமோ, செட்டில்மென்ட் ஆவணமோ, பாகப்பத்திரமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பட்டா உள்ளது. தற்போது என்னிடத்தில்

காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 ல் என்னுடைய தாத்தாவின் பெயர் உள்ளதா என்றால் இல்லை, என்னுடைய அப்பாவின் பெயர் உள்ளது.

7. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என் அப்பாவிற்கு உரிமையில்லை என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, என் தாத்தா பெயரில் பட்டா மட்டும் தான் உள்ளது, அப்பா விற்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை. என் தாத்தா வழியில் சொத்து வந்ததாக கூறியுள்ள நிலையில் அதை காட்டுவதற்காக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தில் பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என்றாலும், எனக்கும், என்னுடைய சகோதரருக்கும், என் தாயாருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கானது பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.